Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    தை 1)    (02-02-1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 349

## 'உலக இளைஞர்கள்' கொழும்பு வர அச்சம்

ஐரோப்பிய நாடுகளிடையே சிறிலங்கா குறித்துமோசமான அபிப்பிராயம்நிலவு கிறது. இதன் காரணமாக 'நிப்பன்மாறு' அல்லது 'உலகஇளைஞர்கள் கப்பல்' என்ற கப்பலில் பயணம் செய்யும் இளைஞர்கள் சிறிலங்கா வர அச்சம் தெரிவித்தனர் என்று தற்போது கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் 'நிப்பன் மாறு' கப்பலில் பயணம் செய்யும் சிறிலங்காவைச் சேர்ந்த ஏ. எஸ். விக்கிரமதுங்க கூறினார். 'நிப்பன் மாறு' கப்பலில் கடந்த வியாழனன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அல்ஜீரியா, பங்களாதேஷ், எகிப்து, ஹங்கேரி, இந்தியா, ஜப்பான், ஓமான், ஸ்பெயின், சுவீடன், துருக்கி. ஐக்கியஅரபு இராஜ்ஜியம், சிறிலங்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்த இந்தியா முயற்சி

## 5 ஆம் திகதி வர்த்தகநிலைகள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்தின் முன்பாக எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறவிருக்கும் மறியற் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்கும் பொருட்டு அன்றைய தினம் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்க வேண்டுமென யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

## மேற்குலக தலையீட்டிற்கு முட்டுக்கட்டை விடுதலைப் புலிகள் பேச்சாளர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அரசியல் அரங்கில் விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தையும் களங்கப்படுத்துவது; இனப் பிரச்சினையில் மேற்குலக நாடுகளின் சமரச முயற்சிகளுக்கும் ராஜரீக தலையீடுகளுக்கும் முட்டுக்கட்டை போடுவது; தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிறிலங்கா அரசு கடைப்பிடித்துவரும் இராணுவ அணுகுமுறையை ஊக்குவிப்பது; பாரிஸ் மாநாட்டில் சிறிலங்கா அரசுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி கடனுதவி பெற வழிபண்ணுவது - இத்தகைய அந்தரங்க நோக்கங்களை நிறைவு செய்யவே இந்திய அரசு புலிகளின் தலைவர்கள் மீது குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கிறது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளர் ஒருவர் ஈழநாதத்திற்கு கருத்துத் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் தலைவர் பிரபாகரன் மீதும், பொட்டம்மான் மீதும் கொலைக் குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பது குறித்துகருத்துத்

போராட்டத்திற்கும், அதனை முன்னெடுத்துச் செல்லும் தலைமைக்கும் அவப்பெயர் ஏற்படுத்தி, உலகத்தின் கவ

சாட்டினார்.

''தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டுத் தோல்விகண்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்று அரசியல் தீர்வு ஏற்படவேண்டும்

## காணாமற்போனோர் விபரம் ஜெனிவாவில்கையளிப்போம்

### கொழும்பு வந்த கனேடியக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் குறித்து அவர்களது உறவினர்கள் தம்மிடம் கையளித்த மகஜர்களின் பிரதிகளைத் தாம் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்த கனேடியத் தூதுக்குழு ஜெனிவாவில் இயங்கும் காணாமற்போனவர்கள் தொடர்பான ஐ நா. குழுவுக்கு அந்த மகஜர்களை அனுப்பிவைக்கப் போவதாகக் கூறியது.

காணாமற் போனவர்கள் ஒவ்வொருவர் பற்றி விசாரணை நடத்தும்படியும் அவர்கள் எவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து அறிந்து கொள்ளவும் அரசு தமக்கு அனுமதி தந்திருப்பதாகவும் குழு தெரிவித்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய குழுவின் அறிக்கை

பட்டிருப்பது குறித்துகருத்துத் தெரிவித்த அவர், சர்வதேச முக்கியத்துவம் பெ ற் று வரும் தமிழரின் தேசிய சுதந்திரப்

னத்தைத் திசை திருப்பிவிடும் நோக்கிலேயே இந்திய அரசு இத்தகைய நடவடிக்கையை எடுத்திருப் ப தா க க் குற்றம்

டதை அடுத்து மேற்குலக நாடு கள் எமது போராட்டத்தில் ஆர்வமும் அக்கறையும் காட் டத் தொடங்கின. சிறிலங்கா

சியல் தீர்வு ஏற்படவேண்டும் என விருப்பம் தெரிவித்தன. இந்த சமரசப் பேச்சுக்களில் மத்தியஸ்துவம் வகி க் க வு ம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் புலிகள் அதிரடி:

# 7 இராணுவத்தினர் பலி

## நவீன ஆயுதங்கள் மீட்பு

(வங்காலை)

மன்னார்- வங்காலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஏழுஇராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர்காயமடைந்தனர். நவீன ஆயுதங்கள் பலவற்றைப் புலிகள்கைப் பற்றினர். இம் மோதலில் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

நேற்றுக்காலை 9-45 மணியளவில் வங்காலை இராணுவ முகாமிலிருந்து சுமார் ஐந்நூறு யார் தொலைவில் இத் தாக்குதல் இடம்பெற்றது. முகாமிலிருந்து வீதித் தடைகளை அப்புறப்படுத்தி வந்த 30 இராணுவத்தினர் மீதே புலிகளால்இத் தாக்குதல்தொடுக்கப்பட்டது. சுமார் 10 நிமிடங்கள் வரையில் நீடித்த இம் மோதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்படடனர். பலர் படுகாயமடைந்தனர். இதைத் தொடர்ந்து இறந்தவர்களை விட்டு விட்டுகாயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு இராணுவம் முகாமிற்குள் ஓடி விட்டது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டன. அவற்றின்விபரம்வருமாறு.

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 01
- ★ ரி - 56 பட்மொடல் துப்பாக்கிகள் - 03
- ★ ரி - 56-1 ரகதுப்பாக்கி- 01
- ★ ஜி. 3 ஒருரக துப்பாக்கி- 01
- ★ 60 எம்.எம். மோட்டர்-01
- ★ ஜே. ஆர்.கைக்குண்டுகள் - 06
- ★ 60 எம். எம். ஷெல்கள்-06
- ★ ஏ கே. மகசீன் - 13
- ★ ஜி.3 மகசீன் - 05
- ★ ஏ.கே. எல். எம். ஜி ரம் மசீன - 01
- ★ 60 எம்.எம். ஸ்கோப் - 01
- ★ ஏ.கே ரவைகள் - 1400
- ★ ஜி.3 ரக ரவைகள் - 90
- ★ ஏ.கே.எல்.எம் ஜி. லிங்- - 503
- ★ ஏ.கே கே ல்சர் - 04
- ★ தொப்பி - 02
- ★ சூ - 5 சோடி
- ★ கிற்பாக் - 01

## யாழ். குடாக்கடலில் பீரங்கிப் படகுகள்

யாழ். குடாப்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப்படகுகள் கடந்த வியாழன் தொடக்கம் நிலைகொண்டிருக்கின்றன. இதனால் மீன்பிடித்தொழில்முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற பட குகளை கடற்படைப் படகுகள் விரட்டியதால் கடற்றொழிலாளர் அச்சத்தினால் திரும்பிவிட்டனர் கடந்த இரண்டு மாதங்களில் குருநகர், பாசையூர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்படடும், பல படகுகள் சேதமாக்கப்பட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா கிராமங்கள் மீது எறிகணை வீச்சு

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியிலுள்ள நெலுக்குளத்திற்கு அண்மையிலுள்ள கிராமங்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் கடும் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருட இறுதியில் இடம் பெற்ற 'கறுப்பு நரி' இராணுவ நடவடிக்கையின் போது நெலுக்குளம் உட்பட ஆறு கிராமங்கள் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டுள்ளன இப்பகுதியில் இப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிற்குள் நுழைய புதிய விதிமுறை அறிவிப்பு

[வவுனியா]

வவுனியா நகர்ப்பகுதிக்குள் போய்வருவோர் சோதனைத் தடைமுகாமில் தம்மைப் பதிவு செய்து தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என உத்தரவு இடப்பட்டுள்ளது. இந் நடைமுறை இன்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியாவில் இராணுவத்தினரின் பிடிக்குள் இருக்கும் பகுதிகளில் வாழும் அனைவரும் தம்மைப் பொலிசாரிடம்பதிவுசெய்து கொள்ள வேண்டுமெனப் பொலிஸ் அத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று சமஷ்டி வழங்காவிடில் இலங்கை பிளவுறுவது திண்ணம்

## கத்தோலிக்க தூதுக்குழு எச்சரிக்கை

(லண்டன்)

'சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றை உருவாக்கி இனப் பிரச்சினையைத் தீர்க்காவிடில் நாடு இரு கூறாவதை எவரும் தடுக்க முடியாது' என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கத்தோலிக்க தூதுக் குழுவைச் சேர்ந்த றோயல் டயஸ் பி. பி, ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்,

அவர் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்,

சமஷ்டி ஆட்சி அமைப்பைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதுதான் சரிஎன்றும்,இதுஇறுதிச் சந்தர்ப்பம் என்றும், இந்தத் தருணத்தை தவறவிட்டால் நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாதுஎன்றும் அவர் தெரிவிததார்.

மேலும் தமிழ் மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் விரும்புகிறார்கள். அதிகாரப் பரவலாக்கத்தோடு கூடிய சமஷ்டி ஆட்சி அமைப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாரிஸில் விவாதிக்கப்படும்

சிறிலங்காவிற்கு விஜயம் செய்து மனிதஉரிமைகள் மீறல் குறித்து விசாரணை செய்த கனேடியத் தூதுக்குழு வெளியிடவிருக்கும் அறிக்கை பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி பரிஸ் நகரில் நடைபெறவிருக்கும் சிறிலங்காவிற்கு உதவும் நாடுகள் கூட்டத்தில் விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறு கொழும்பிலுள்ள மேற்கு நாடுகளின் தூதுவர் ஒருவர் பி. பி. ஸி சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.

சிறிலங்காஅரசு உதவும்நாடுகளில் இருந்து 860 மில்லியன் டாலரைக் கடனாகவோ அல்லது உதவியாகவோ எதிர்பார்க்கிறது. மனித உரிமைகள் மீறலைச் சிறிலங்கா அரசு நிறுத்துவதாக உறுதியளித்தால் தான் சிறிலங்கா எதிர்பார்க்கும் நிதி உதவி சாத்தியப்படும் என்றார் அவர்.

# தொலைக்காட்சி அரசுடமையா?

## கனேடியக் குழு சீற்றம்

(கொழும்பு)

''தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள் எங்கே? இங்கு தொலைக்காட்சி நிறுவனங்களும் அரசுடைமையா?'' இவ்வாறு மனித உரிமைகள் மீறல் தொடர்பான விசாரணை மேற்கொள்ள சிறிலங்காவுக்கு அண்மையில் விஜயம் செய்த கனேடிய தூதுக் குழுவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பெறி கவ்வினி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில்கேள்வி எழுப்பினார். பத்திரிகையாளர் மாநாட்டில் அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி படப்பிடிப்பாளரைக் காணாததால் அவர் இவ்வாறு கேட்டார் என்று சொல்லப்படுகிறது.

சிறிலங்கா அரசு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஒரு சமரசத் திட்டத்தை முன்வைக்காதது மற்றும் தொடர்புச்சாதனங்கள் இனப் பிரச்சினை குறித்து ஏனோதானோ என்று செய்தி வெளியிடுவது குறித்தும் தாம் குழப்பமடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய குழுவிற்கு யாழ். வரத்தடை

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு கொழும்பு வந்த கனேடியத் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் வருவதற்கு சிறிலங்கா அரசு தடை விதித்தது. இதனால் ,அக்குழுவின் யாழ். விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இம்மனித உரிமை தொடர்பான விசாரணைக்குழு வவுனியா, மட்டக்களப்பு, கண்டி, தங்காலை, காலி ஆகிய இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹரியானா முதலமைச்சர் குடும்பத்துடன் சுட்டுகொலை

(டில்லி)

ஹரியானா முதலமைச்சர் வர்மாவும் அவரது குடும்பத்தினரும் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஹரியானா பாரா மாவட்டத்தில் முதலமைச்சர் வர்மா, அவரது மனைவி, மகள் மற்றும் கார்ச்சாரதியும், மெய்ப் பாதுகாப்பாளரும் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நாளை முதல் வெளி வருகிறது

பிரேமதாசா எப்படிப்பட்ட மனிதர்?

'பிரம்மஞானி' எழுதும் விமர்சனக் கட்டுரை

பிரதிகளுக்கு முந்துங்கள்

இதோ!
மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்
பிரசித்தி பெற்ற நிறுவனம்!


நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

❋ அழகு மிளிரும் வர்ணவேலைகளா
❋ ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா
தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய

நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்
New Era Publications
267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
இ/3


## கனிவதற்கு முன் விதையாகிய மலர்கள்



த சத்தியேந்திரா (மருத்துவபீட மாணவன்)

சி. ஜெகநாதன் (விஞ்ஞானபீட மாணவன்)

உலகினில் உயிர் பிறப்பு
07-11-1965

உரிமையில் உயிர் துறப்புக்கள்
02-02-1989 02-02-1989

தென்றலுக்கு அடிபணிந்த
நாணலல்ல இவர்கள்
புயலையே எதிர்த்து நின்ற பூக்கள்

இருட்டினில் வெளிச்சத்தை
தேடியவர்களல்ல
அந்த இருட்டையே காயப்படுத்திவிட்ட
விடிவெள்ளிகள்

# கனி வளம் பெருக்குவோம்

### மாதுளை

ஈரான் நாட்டைத் தாயகமாகக் கொண்ட மாதுளை ஸ்பெயின், மொரொக்கோ, எகிப்து, ஆப்கானிஸ்தான், இந்தியா ஆகிய நாடுளில் பயிரிடப்படுகின்றன. பழத்தின் சாறு உடலுக்குக் குளிர்ச்சியையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் ஊட்டவல்லது. 12-15% வெல்லம் அடங்கி இருப்பதால் மிக ருசிகரமானது. பழக் கோதும் மரப் பட்டையும் ஆயுர்வேத வைத்தியத்தில் மருந்தாக உபயோகிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. வயிற்றுக் கோளாறு. வயிற்றோட்டம் ஆகிய நோய்களுக்கு இவற்றை நீரில் அவித்துப் பருகினால் நோய் தணியும். எனவே மாதுளைப் பயிரை சுவையான பழத்திற்காகவும் மருத்துவ தேவைக்காகவும் பயிரிட்டுப் பயன் பெறலாம். எமது பிரதேசத்தில் வீட்டுத் தோட்ட மட்டத்தில் இப் பயிர் செய்யப்படுகிறது. இது வரட்சியைத் தாங்கக் கூடிய பழப் பயிர். ஆதலால் எமது உலர் வலயத்திற்கு மிக இசைவானதொன்றாகும். ஆழமான இருவாட்டி மண் அலுவியல் மண்களும் பயிர் விருத்திக்குச் சிறப்பானவை.

### இனப்பெருக்கம்....

விதைகளில்இருந்தும் ''வான் பதியம்'' முறையைக் கையாண்டும் இன விருத்தி செய்யலாம். பதியம் மூலம் நாட்டப்பட்ட மரம்6-8மாதங்களில் பூக்க ஆரம்பிக்கும். விதை மூலம் உற்பத்தி செய்த பயிர் 2½-3வருடத்தில் பூக்கும். வருடத்திற்கு இருமுறை அறுவடை செய்யலாம். ஆனியும் - சித்திரையும் அறுவடை மாதங்களாகும்.

### தொடர்ச்சியான அறுவடையும்பயனும்

(அ) தொடர்ச்சியான அறுவடை பெறுவதற்கு ''மாதுளைப் பயிர் கத்தரித்தல்'' ஓர் முக்கிய அம்சமாக அவதானிக்கப்பட வேண்டும். ஒரு தண்டுடன் கூடிய தாய் ... தண்டுகளுக்கு மேல் வளர விடக்கூடாது.

(ஆ) நாற்றுகள் நாட்டும் போது பக்க வேரை அகற்ற வேண்டும். 75ச. மீ உயரம் வளரவிட்டு நுனியை அகற்றி விட வேண்டும். பிரதான தண்டிலிருந்து 4 கிளைகளை மட்டும் வளர விட வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 4 கிளைகளை 6 மாதங்களின் பின் 46ச. மீ நீளமாக விட்டுக் கத்தரிக்கவும் தெரிவு செய்து வளர்க்கப்படும் கிளைகளில் வேறு கிளைகள் முளைத்து வளர அனுமதிக்கக் கூடாது. நான்கு கிளைகளில் இருந்து தோன்றும் பக்கக் கிளை 6 மாதத்திற்குப் பின் 46ச. மீ நீளமாய் இருக்கும் போது கத்தரிக்க வேண்டும். இதிலிருந்து தோன்றும் பக்கக் கிளை 9 மாதத்திற்குப் பின் கத்தரிக்க வேண்டும்.

(இ) பழங்கள் 'ஸ்பேர்'' எனப்படும் சிறிய கிளைகளில் இருந்து பெறப்படும். இச்சிறிய கிளைகள் 4-5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து காய்க்கக் கூடியன. பின் இவை வலுவற்றுப் போகும். எனவே இவற்றை அகற்றி விட வேண்டும்.

(ஈ) பூக்கள் காய்க்க இடையூறாய் இருப்பது அடிமரத்தில் இருந்து வளரும் உறிஞ்சிகளே காலத்திற்குக் காலம் உறுஞ்சி வளரும் போது அகற்ற வேண்டும்.

(உ) பழம் விருத்தியாகும் போது நில ஈரலிப்பு சீராக இருத்தல் வேண்டும். திடீர் வரட்சி ஏற்படும் போது பழத்தில் வெடிப்பு ஏற்படும்.

### பீடை

மாதுளைப் பழம்துளைப்பான்: வண்ணாத்திப் பூச்சியின் குடம்பிகள் பழத்தை துளைப்பதன் காரணமாக பழம் பழுதடையும். கனி கட்டிய பின் பூச்சி நாசினி இருமுறையாவது விசிறல் வேண்டும்.

பட்டை துளைப்பான்:- இது பட்டையை உண்பதால் தாவரம் பாதிக்கப்படுகிறது. கையால் பட்டையை நீக்கி புழுக்களை அழிக்கலாம்.

கறையான்:- இவற்றின் தாக்கம் மழை இல்லாதகாலத்தில் அவதானிக்கலாம். ''அல்ட்ரின்'' தூளை அடிமரத்தில் போட்டு கறையான் தாக்கத்தை தவிர்க்கலாம்.

அணில், கிளியின் தாக்கம்:- இவற்றுக்கு எதிராக ஒலிகளை எழுப்பக்கூடிய மணிகளையோ தகரங்களையோ மரத்தில் கட்டி இடையிடையே கயிற்றின் உதவியுடன் ஒலி எழுப்பி இவற்றை விரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். காய்களைச் சுற்றி பத்திரிகைகளைக் குழாய் போன்று கட்டுவதும் துவாரங்கள்கொண்ட பொலித்தீன் உறைகளை காய்களைச் சுற்றிக் கட்டுவதும் இவற்றின் தாக்கங்களைத் தடுப்பதற்கு உதவும்.

# சிகை அலங்கரிப்பாளர் நிவாரணம் வழ. கோரிக்கை

(குருநகர்)

''யாழ் - உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழில் கிராமங்களில் பாதிக்கப்பட்ட சிகை அலங்கரிப்பாளர் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குக''

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ் - கிளையால் யாழ் - அரச அதிபர் யாழ் - உதவி அரச அதிபர் ஆகியோருக்கு சமர்ப்பித்துள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்...

கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், கொட்டடி நாவாந்துறைப் பகுதிகளில் சிகை அலங்கரிப்புத்தொழிலை செய்து வந்த குடும்பங்களும் கடற்றொழிலாளர்களின் பாதிப்புக்காரணமாக வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளர்.

விரல் கொண்டு எண்ணக் கூடிய குறைந்த தொகையினரான எமக்கும் நிவாரணத்தை வழங்க தாழ்மையுடன் கோருகிறோம்.'' இவ்வாறு கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்...

# உக்ரெயின் தூதராக கிளாஸ்ரோன் நியமனம்

முன்னாள் சோவியத் யூனியனில் இரண்டாவது பெரிய குடியரசான உக்ரேய்னுக்கு இங்கிலாந்தின் தூதுவராக டேவிற் கிளாட்ஸ்ரோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் நூல் வெளியீடொன்றில் உரையாற்றிய இங்கிலாந்தின் உயர் ஸ்தானிகர் யோன் பீல்ட் இத் தகவலைத் தெரிவித்தார்-

டேவிட் கிளாட்ஸ்ரோன் இங்கிலாந்தின் உயர் ஸ்தானிகராகக் கொழும்பில் கடமையாற்றிய சமயம் வேண்டத்தகாத பேர்வழியாக பிரேமதாசா அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டு சிறிலங்காவை விட்டு வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

# தோட்டங்கள் தேசியமயம்; 5,000 கோடி ரூபாநட்டம்

இருபது வருடங்களுக்கு முன்னர் பெருந்தோட்டங்களை தேசியமயமாக்கியதன் மூலம் இலங்கைக்கு ஐயாயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் விளக்கியுள்ளார்.

அரசுக்கு சொந்தமான தோட்டங்களின்மூலம் மாதாந்தம் நாற்பதுகோடி ரூபா முதல் 50கோடி ரூபாவரை இழந்து வந்திருப்பதாக தெரிவித்தார். நேற்று முன் தினம் பெருந்தோட்ட நிர்வாகங்களைச் சீரமைப்பது தொடர்பாக தேசிய பத்திரிகை ஆசிரியர்களுடன் தமது அமைச்சில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போதே திரு. பாஸ்கரலிங்கம் இத்தகவல்களை வெளியிட்டார்.


## வரி விளம்பரம்

ஆங்கிலப் பயிற்சி
ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH
தற்கால இங்கிலாந்து முறையிலான 3 மாத ஆங்கிலப் பயிற்சி. V. N. Kandasamy A I B. Part I (London) Inter (London) 87, கொக்குவில் - திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அருகாண்மையில்) கொக்குவில். (2169)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

இ. 9

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் ...

விடிவெள்ளிகள்

காய்ப்பதற்காக மட்டும்
பூத்துவிட்ட பூக்களல்ல இவர்கள்
கனவதற்கு முன் விதையாகிய மலர்கள்

- மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்

(2167)

ஒரு தண்டுடன் கூடிய தாய் மரமாக வளர்ப்பது சிறந்த பலனை தரும். செடி போன்று நிலத்திலிருந்து வளரும் பல தண்டுகள் கொண்ட மரமாக வளர்க்க விரும்பினால் 3 - 4

கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''கடற்றொழிலாளர்களைப் பெரும் பகுதியாகக் கொண்ட

கிறோம்.'' இவ்வாறு கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (21)

## அழைப்பு

பயிர் செய்கையில் புதிய முறைகளை அறிமுகம் செய்வதைமுனைப்பாக கொண்டு வயல் விழா நடைபெறவுள்ளது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒழுங்கு செய்துள்ள இவ்விழா நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு அந் நிலையத்தில் இடம்பெறும் பயிர்ச் செய்கையில் ஆர்வமுள்ள அனைவரையும் இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வுநிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது


வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.


## தொண்டமான் பதவி விலக பிரதேச சபை பிரேரணை

(இரத்தினபுரி)

அமைச்சர் கொண்டமான் முன்வைசதுள்ளயோசனைகள் இந் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் பாதகமான வையகும் அந்த யோசனைகள் செயற்படுததப்பட்டால் நாடு துண்டாடப்படுவது உறுதி. இதனால் அமைச்சர் தொண்டமான் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக்கோரும் தீர்மான மான்றை நிறைவேற்ற வேண்டுமென இரத்தினபுரி பிரதேச சபையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிஉறுப்பினரான பந்துலசரவிட்ட கேட்டுக் கொண்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் தொண்டமானின்யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நாட்டின் இறைமைக்கு பெரும் ஆபத்து ஏற்படும்எனவும்தெரிவித்தார்.

## கிரிக்கெட்

## உலகக் கிண்ணப்போட்டியில் மியன்டாட் இல்லை

இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் உலக கிண்ண கிரிக்கட் போட்டிகளில் பாகிஸ்தானின் அதி சிறந்த துடுப்பாட்ட வீரரான மியன்டாட் கலந்து கொள்ள மாட்டார்.

மேற்படி போட்டிக்காக பாகிஸ்தான் கிரிக்கட் கட்டுப் பாட்டுச்சபை அறிவித்த கிரிக்கட் அணியில் இவரது பெயர் இடம் பெறவில்லை. பயிற்சியின் போது இவரது முதுகில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாகவே இவர் மேற்படி அணியில் இடம் பெறவில்லை

## இலங்கை மாணவர் மொஸ்கோவில் அவதி

மொஸ்கோவில் இலங்கை மாணவர்கள் முப்பத்தைந்து பேர் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருப்பதாகவும், புலமைப் பரிசில் பெற்று சோவியத்திற்குச் சென்றோர் அடித்து விரட்டப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இவர்கள் ஜோர் ஜியாவில் இடம்பெற்றுவரும் கலவரங்களில் சிக்குண்டு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், வெறுங் கையுடன் மொஸ்கோவிற்கு தப்பியோடி வந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



நவாலி வடக்கைச் சேர்ந்த

**அமரர் கந்தசாமி சண்முகசுந்தரம்**

அன்னையின் மடியில் 18-02-1945

ஆண்டவன் அடியில் 05 02 1989

திதி 02-02-1992

மூன்றெழுத்தில் உன் மூச்சிருக்கும்
என்றுமே உண்மைப் பேச்சிருக்கும்
வீட்டிற்கொரு தலைமகனாய்
நாட்டிற்சொரு நல்லாசானாய்
அறிவுரைகள் பல கூறி
ஆகரவும் எமக்களித்த
உத்தமனே புதைகுழியில் நீ போய்
மூன்றாண்டு மறைந்தாலும்
என்றும் உன்னுருவம் எம் மனதில்
நீங்காமல் நிலைத்திருக்கும்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.
தாய், சகோதரர்கள்.

(சி/3866)

## மருத்துவக் கல்வி (ஜேர்மனி மருத்துவம்)

*(Royal Medicine)*

**Doctor of Homoeopatic Medicine & Surgery**

**D. H. M. S.**

தகைமை: க. பொ. த. (உயர்தரம்)

மருத்துவ சங்கத்தின் பரீட்சையும் பதிவும் தொழில் அனுமதியும்
19. 02. 92 இல் ஆரம்பமாகின்றன.

மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்கட்கு இலவசக்கல்வி.

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி**

இல. 6, பருத்தித்துறை வீதி, 1 -ம் ஒழுங்கை,
யாழ்நகர்.

(3876)

## நினைவு கூருகின்றோம்

## 1992-02-02

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச்சூட்டினால் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ஞானி** (செல்லத்துரை பாக்கியநாதன்-பாடசாலைவீதி, கிராய்க்கேணி, அம்பாறை)

1989ஆம் ஆண்டு கொம்புவைத்த குளத்தில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**செட்டி** (துரைராஜா ரமேஸ்பாபு - வேப்பங்குளம், வவுனியா)

**ஜெரி** (புவனகாந்தன் பேரின்பநாதன் - 8 ஆம் வட்டாரம், சாம்பல் தீவு, திருக்கோணமலை)

தம்பனைக்குளம் கட்டை அடம்பன் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**கப்டன் ரூபன்** (கந்தையா கந்தசாமி - 1 ஆம் வட்டாரம், மண்டைதீவு)

**சேகர்** (ஞானசம்பந்தர் சின்னத்தம்பி - பாலம்பிட்டி, மன்னார்)

யாழ். பல்கலைக்கழக வளாகச்சந்தியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான பல்கலைக்கழக மருத்துவபீடமாணவன்

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா**

பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவன்

**சின்னத்தம்பி ஜெகநாதன்**

ஒட்டிசுட்டானில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்

1991ஆம் ஆண்டு மூதூர் இலக்கந்தைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதால் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். பரம்** (வேலுப்பிள்ளை மோகனதேவன் - முட்டுச்சேனை, வெருகல்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**செந்தில்** (செல்லப்பா சுரேஸ்குமார் - அளவெட்டி, வடக்கு)

**சந்திரன்** (சின்னையா குணசேகரன் - கிளிநொச்சி)

**வாமதேவன்**

ஆனையிறவில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**பிரகாஸ்** (குணநாயகம் கேதீஸ்வரன் - 32, வன்னேரிக் குளம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3875)

## சிந்தனைக்கு

தேவையில்லாதவற்றை நீ வாங்கினால், விரைவில்
தேவையானவற்றை விற்க நேரிடும்
— செக்கோஸ்லவாக்கியப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 02-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


## கூட்டுச் சதியில் புதிய அத்தியாயம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது இந்தியப் புலனாய்வுத்துறை குற்றம் சாட்டியுள்ளது. இதன் அடிப்படையில், தலைவர் பிரபாகரனையும், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திரு. பொட்டுஅம்மானையும் கொலைக்கு காரணமானவர்கள் எனக் கூறி அவர்களை நீதிமன்றத்தில் சரணடையுமாறு, ராஜீவ்கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் நீதிபதி சித்திக் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் இம்முடிவானது, விடுதலைப்புலிகளுக்கு எதிரானதொன்றல்ல. இலங்கைத்தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதும், சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கும் ஒரு முடிவும் ஆகும். அதாவது தமிழர் தேசியப் பிரச்சினையை இராணுவ நடவடிக்கையின் மூலம் அடக்கி ஒடுக்குவதற்கு இந்தியப் பிராமண அதிகார வர்க்கத்தினர் எடுத்த முடிவும் ஆகும்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டார் என்பதை விட அவர் தனது ஆட்சிக் காலத்தில் தென்னாசியாவில் மேற்கொண்ட பல்லாயிரக்கணக்கான கொலைகளுக்குத் தண்டனையை அனுபவித்தார் என்பதே பொருந்தும்.

இந்தியப் பத்திரிகைகள் குறிப்பிடுவது போன்ற அன்பான காதல் வாழ்க்கையை மட்டும் வாழ்ந்த ஓர் அழகான இளவரசர் அல்ல அவர். இந்திய அதிகார வர்க்

# அரசியலில் ரணகளம்! பிக்குகளே காரணம்!!

சிங்களவர் மத்தியில் நிலவும் சிந்தனைக் குழப்பம், செயல் குழப்பம் ஆகியவற்றுக்கு சிங்கள புத்தமத சிந்தனையில் ஒழுக்க நியாய பாரம்பரியம் இன்று இல்லாமை ஒரு காரணமாகும். புத்தர் தனது வாழ்க்கைக் காலத்தில் மூன்று தடவை இலங்கைக்கு வந்து சென்றார். இவற்றில் ஒரு தடவை சிவனொளிபாதமலையில் தமது கால் பாதத்தைப் பொறித்துச் சென்றார் முதலியன போன்ற கட்டுக் கதைகள் இன்னும் வழக்கில் இருக்கின்றன. இலங்கையில் மிகவும் பிரசித்திபெற்ற தொல்லியலாளரான டாக்டர் பரணவிதான தான் போதிய அறிவியல் நோக்குடனும், துணிவுடனும் இந்த தத்துவத்தை மறுத்துரைத்த வரலாற்று ஆசிரியர் ஆவார்.

புத்தர் தமது மறைவுக்கு முன் இலங்கையின் பாதுகாப்பை சக்ராவுக்கு ஒப்படைத்தார். புத்தருக்கு தமது தத்துவம் இறுதியில் இந்தத் தீவில் ஸ்தாபிக்கப்படும் என்பது தெரிந்திருந்தது. புத்தரின் ஆணையை ஏற்றுக் கொண்டதும் சக்ரா விஷ்ணுவை அழைத்து தீவின் பாதுகாப்பை அவரிடம் ஒப்படைத்தார். இது இன்னொரு கட்டுக்கதை. இந்தக்கட்டுக் கதைகள் வரலாற்று உண்மைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒரு மதகுரு வரலாற்றாசிரியராகும்போது இதுதான் நடக்கின்றது. இலங்கையின் மாபெரும் வரலாற்றுப் பதிவேடான மஹாவம்சம் ஒரு மதகுருவால் எழுதப்பட்டது. மகாநாம என்ற இந்த மதகுரு கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் மஹாவம்சத்தை எழுதினார். மகாவீர சங்க அவருடைய மூல ஆதாரங்களை சேமித்து வைத்தது. மஹாவம்ச நூலின் பிரதிகள் அனைத்தையும் எரித்துக் கொளுத்த வேண்டும். ஏனென்றால் சிங்களப் பௌத்தர்களின் இன ரீதியான சிந்தனைக்கு அவைதான் பெரிதும் பொறுப்பானவை என்று மதிப்புக்குரிய ஒரு கல்வி

ஆரம்பத்தில் இருந்து ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் கி. மு இரண்டாம் நூற்றாண்டில் முற்பகுதியில் அபயகிரி பிரிவு என்று அழைக்கப்படும் புதிய பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் இதிலிருந்து இன்னொரு கோஷ்டி பிரிந்து ஜீத்தாவன மடாலயத்தை அதன் தலைமையகமாகக் கொண்டிருந்தது.

வாசகத்திலும் வியாக்கியானத்திலும் சில வேற்றுமைகள் இருந்த போதும் இந்த மூன்று பிரிவுகளும் புத்த மதத்தின் தேரவாதப்பிரிவு அல்லது பாரம்பரியப்பிரிவு என்பதைச் சேர்ந்தவையாக இருந்தன. ஆனால் இந்தியாவில் புத்த மதத்தவர்கள் மத்தியில் புதியதொரு பிரிவு தோன்றியது. ஒருவர் சொந்த விமோசனத்துக்கு பாடுபடுவதற்கும், முழு மனித குலத்தின் விமோசனத்திற்கு பாடுபடுவதற்கும் இடையில் இந்தப்பிரிவு வித்தியாசம் கண்டது என்று பரணவிதான குறிப்பிடுகின்றார். இந்தப்பிரிவின் ஆதரவாளர்கள் முழு மனித குலத்தினதும் விமோசனத்திற்காகப்பாடுபடுவதை பெரிய பிரயத்தனம்- மகாயான என்று அழைத்தார்கள் ஒருவருடைய விமோசனத்திற்காகப் பாடுபடுவதை தாழ்வான பிரயத்தனம் — ஹீனயான என்று அழைத்தார்கள்.

புத்த மதத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவிற்கும் சீர்திருத்தத்தினால் ரோமன் கத்தோலிக்க மதத்தில் ஏற்பட்ட பிரிவுக்கும் இடையில் ஒரு ஒத்ததன்மை இருப்பதைக் காண முடியும். சீர்திருத்த வாதிகளைப்போல் புத்தமதத்தின் மகாயான பிரிவினர் கூடுதலான சுதந்திரமானவர்களாகவும் ஆகவே முற்போக்கானவர்களாகவும் இருந்தார்கள். துணிவான தத்துவஞானிகள் அவர்களால் கவர்ந்திழுக்

போதித்தது.

மகாவிகாரை மடாலயத்துக்கும் அபயகிரி மடாலயத்துக்கும் இடையில் உக்கிரமான வாதப்பிரதிவிவாதம் ஒன்று ஏற்பட்டது. கி. பி. 215-237 ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்த வொஹறக்கதிஸ்ஸவின் காலம் தொடக்கம் எதிர்த் தரப்பை எரித்தொழிக்கும் செயல்களும் இடம் பெற்றன. அபயகிரி மடாலயம் வைத்திருந்த பதிவேடுகள் எரித்து அழிக்கப்பட்டன. ஒரு புத்தமத விரோதச்செயல் இவ்வாறு மகாவிகாரை அதாவது பாரம்பரியப்பிரிவு புத்தமதத்தில் அபயகிரிப் பிரிவை அழித்தொழித்தது ஹீனயான புத்தமதப் பிரிவு தான் துரதிஷ்டவசமாக வெற்றிகண்டது. இலங்கையில் புத்தமத சிந்தனையிலான அறிவு ரீதியான தேக்கம் இதனால் தான் ஏற்பட்டது. ஸ்பெயினில் சீர்திருத்த வாதிகளுக்கு ஏற்பட்ட அநியாயங்களை மனதில் கொண்டு சீர்திருத்தம் நசுக்கப்பட்டிருந்தால் ஐரோப்பாவில் அறிவுக்கு என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள் இலங்கையில் இது தான் நடந்தது சீர் திருத்தம் நசுக்கப்பட்டது.

இலங்கை அரசியலில் புத்த மத குருக்களின் பாத்திரம் அநேகமாக எதிர் மறையானதாகவும் பிற்போக்கானதாகவும் இருந்தது. அவர்கள் ஆக்க பூர்வமான பாத்திரம் வகித்த காலமும் இடைக்கிடை இருந்தது சில குறிப்பிடத்தக்க புறநடைகள்

னொரு புத்தமத குரு இக்கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைத்தண்டனை பெற்றதும் (அவர் அங்கேயே இறந்தார்) எதுவிதத்திலும் தற்செயலானதல்ல.

அண்மைக்காலக் கலவரங்களின் போது சில புத்தகுருமார் அங்கிகளை உயர்த்திப் பிடித்த வண்ணம் வெறி பிடித்த மக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றார்கள். இந்தக் கலவரங்களின் போது ஜனாதிபதி ஜயவர்த்தனா இன வெறியர்களைச் சாந்தப்படுத்த மிகவும் தமிழர் எதிர்ப்புணர்வுடைய எல்ல குணவன்ச என்ற புத்த மத குருவின் உதவியைப்பெற வேண்டியிருந்தது அமைச்சர் காமினி திசநாயக்காதான் அவரை ஜனாதிபதியிடம் கூட்டிச் சென்றார்.

கொழும்பு வஜிரராம கோவில் பிரதான மதகுருவான மடிகெபன்னசீக போன்ற மதகுருமார் மற்றக்குருமாரின் அப்பட்டமான இனவெறியை மூடிமறைக்கும் வகையிலான "அறிவு ஜீவித்துவ" மூடுதிரையை அளிகின்றார்கள். தமிழர்கள் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள 261 புத்தமத கோயில்களை அழித்துள்ளதாக அவர் கூறியுள்ளாரென 1983 செப்டம்பர் 15 ஆம் திகதி இந்தியா டுடே சஞ்சிகை கூறுகின்றது. எமது விருந்தோம்பல் காரணமாக தென் இந்தியாவில் இருந்து வந்த படையெடுப்பாளர்களை தங்கி இருக்க

இலங்கையில் உள்ள புத்த மதகுருமார் புத்தர் போதித்தவாறு உலோகாயதப் பொருள் அற்ற எளிய வாழ்க்கையை வாழவில்லை. கிராமங்களில் உள்ள ஏழைப் புத்தகுருமார் தான் இதற்கு புறநடையாக இருந்தார்கள். ஆனால் பல புத்த குருமார் சுரண்டல்கார செல்வர்களாக இருந்தார்கள். இலங்கையில் புத்த மதத்தின் வரலாற்றில் ஆரம்பத்திலேயே இது தொடங்கி விட்டது. வாலகம்பாகு காலம் தொட்டே (கி. மு. 103 - 102 கி மு. 89 - 77) சிங்கள மன்னர்கள் மடாலயங்களுக்கு நிலத்தைத் தானம் செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இது புத்த மதக் கோட்பாட்டுக்கு நேர் விரோதமானது. வாலகம்பாகு தான் நாடு கடந்திருந்தபோது தனக்கு உதவி செய்த மதகுருமாருக்கு வெகுமதி வழங்க இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். சங்கவின் ஆதரவைப்பெற மற்ற மன்னர்கள் இந்தப் பழக்கத்தைக் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். பொருளாதார நலன்களை சங்கவுக்கு அளித்ததால் அதன் எண்ணிக்கை பெருகியது. சங்க உறுப்பினர்களுக்கு நல்ல வாழ்க்கை உத்தரவாதம் ஆகியது புத்தரின் போதனைகளுக்கும் இதற்கும் தொலை தூரம். இவ்வாறு இந்த மதகுருமார் சமுதாயத்தில் புல்லுருவிகள் ஆனார்கள். எந்த விதமான ஆக்க பூர்வமான வேலையையும் செய்யாமல் தமக்குத் தேவையானது எல்லாவற்றையும் பெற்றார்கள். மகாயான பிரிவைச் சேர்ந்தவர்கள் இப்படி இல்லை. அவர்கள் ஒருவகை உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டார்கள்.

ஆகவே இலங்கையில் புத்த மத சங்கம் அநேகமாக எதிர் மறைப் பாத்திரத்தையே வகித்திருக்கிறது. சிங்களவர்கள் அதாவது புத்தமதத்தவர்கள் சங்கவின் ஆதிக்கம் அடிமைத்தனத்தில் இருந்து விடு

### அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்காவிட்டால் இலங்கையில் அமைதிக்கு இடமில்லை

"ஒரு கம்யூனிஸ்ட்டின் அரசியல் நினைவுகள்" என்ற தலைப்பில் திரு. நா. சண்முகதாஸன் எழுதிய சுயசரிதையில் இருந்து ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கான இளவரசர் அல்ல அவர். இந்திய அதிகார வர்க்கத்தின் தலைவராக, தென்னாசியாவில் தேசிய சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கு எதிரான ஓடுக்குமுறையாளராகவும் ராஜீவ் காந்தி இருந்தார்.

அவர் ஓர் அப்பாவிக் குடிமகனல்ல. பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும், அசாமிலும், இலங்கையிலும் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப் படுவதற்குக் காரணமானவர். இலங்கையில் மட்டும் அவரின் உத்தரவின் பேரில் சுமார் 7000 தமிழர்கள் வரையில் கொல்லப்பட்டார்கள். ஆயிரக் கணக்கில் படுகாயமுற்றார்கள். பெருமளவில் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான இளம் காதலர்கள் கண்ணீர் விட்டார்கள்.

ராஜீவ்காந்தியின் கொலையால் இந்தியப் பிராமண அதிகார வர்க்கமே அதிர்ந்தது. அவர்களின் கனவுகள் சிதைவுற்றன. ராஜீவ்காந்தியை ஆட்சியில் ஏற்றிய போது அவரை ஒரு அப்பழுக்கற்றவராகக் காட்டி, ஓர் உலகத்தலைவராக எண்ணிய இந்தியப் பிராமண அதிகார வர்க்கத்தினருக்கு இலங்கையில் ஏற்பட்ட இராசதந்திர, இராணுவத் தோல்விகள் அவர்களைத் தலைகுனிய வைத்தது. அத்தோடு ''மிஸ்டர் கிளினின்'' போபேஸ் பீரங்கி விவகாரத்திலும், எம். எச். டி நீர்மூழ்கி பேரத்தினாலும், ஏ-320 ஏயார்பஸ் கொள்வனவினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால், மக்கள் ராஜீவ்காந்தியை அரசியலில் இருந்து தூக்கி எறிந்தார்கள்.

இந்நிலையில், பிராமண அதிகார வர்க்கத்தின் கனவுகள் நிராசையானதற்கும், இவ்வர்க்கத்தினரின் ஆதிக்கத்தை இந்திய எல்லைக்குள் இலங்கைத் தமிழ் மக்கள் தள்ளியமைக்கும் வஞ்சம் தீர்க்கும் நோக்கமாகவே இந்தியப் பிராமண அதிகார வர்க்கம் தற்பொழுது செயற்படத் தொடங்கியுள்ளது.

வி.பி. சிங் ஆட்சிக்காலத்தில், சற்றுத்தளர்ந்திருந்த பிராமண அதிகார வர்க்கம் தற்பொழுது உயர்வகுப்புப் பிராமணன் என்ற ஒன்றிற்காகவே அதிகாரத்திற்குக் கொண்டுவரப்பட்ட நரசிம்மராவின் தலைமையில் அரசியல்வாதிகளும், அதிகாரவர்க்கத்தினரும் ஒன்றிணைந்து தமிழரின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முற்பட்டுள்ளனர். இன்றைய சர்வதேச அரசியற் சூழ்நிலையில் தனது நேரடியான இராணுவத் தலையீடு சாத்தியமற்ற நிலையில், சிறிலங்கா பேரினவாத சக்திகளோடு சேர்ந்து போராட்டத்திற்கு எதிராகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

இராணுவ புலனாய்வுத்துறை விடயங்களில் ஒத்துழைத்து வந்த இவ்விரு அதிகார வர்க்கத்தினரும் (இந்திய பிராமணர்களும் - சிறிலங்கா பௌத்த பேரினவாதிகளும்) தற்பொழுது தலைவர் பிரபாகரன், திரு. பொட்டம்மான் மீது ராஜீவ்காந்தி கொலைக் குற்றச்சாட்டை சுமத்தி சர்வதேச ரீதியாக இலங்கைத் தமிழர் போராட்டத்திற்கு கிடைத்துவரும் அங்கீகாரத்தையும் இவ்விவகாரத்தில் மேற்குலகின் தலையீட்டையும் தடைப்படுத்த முயற்சிக்கின்றன. அத்தோடு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் எழுந்த அவப்பெயரால், பாதிக்கப்படவிருக்கும் நிதிஉதவியை கிடைக்கச் செய்வதற்கும், அதன்மூலம் இராணுவ நடவடிக்கைகளைத் தொடரவாய்ப்பளிப்பதற்கும்வழிதேடிக்கொடுக்கின்றது. அதாவது இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இந்தியா மீண்டும் ஒரு துரோகத்தனமான இராசதந்திர அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது என்பதே உண்மை.

மதிப்புக்குரிய ஒரு கல்விமானான டாக்டர் ஈ.டபிள்யூ. அதிகாரம் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக் கட்டுரை சிங்கள ஞாயிறு இதழான திவிரசவில் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி வெளிவந்தது இது ஒரு சுத்தமான காற்று வீசுவது போல் அமைந்தது.

இலங்கையின்புத்தமதத்தை புரிந்து கொள்ள அதன் வரலாற்றின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிளவுகளை அறிந்து கொள்வது அவசியம் தத்துவ கட்டுப்பாட்டு விஷயங்களில் இலங்கை புத்த மகுகுருமார் அனைவரும் மகா வீராவின் அதிகாரத்தை அங்கீகரிக்கப்பட்ட புத்தமதக் கோயிலாக கள். துணிவான தத்துவஞானிகள் அவர்களால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். மகாயான தத்துவத்திற்கு அபயகிரி மடாலயத்தில் ஆதரவாளர்கள் இருந்தார்கள். மகாவிகாரை அதை வன்மையாக எதிர்த்தது. மகாவிகாரை தேரவாத புத்த மதம் பாரம்பரியப் பிரிவின் கோட்டையாகியது. இவ்வாறு மகாவிகாரைசிறிலங்கா, பர்மா சீயென், கம்போடியா. ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு பௌத்தவாதபோதனைகளை போதித்தது. அபயகிரிமடாலயம் காஷ்மீர். திபெத், சீனா, ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு புத்தவாத போதனைகளை இந்திய வைத்துளியவிடம் இருந்து கற்றுக் கொண்டு

இருந்த போதும் புத்தமதகுருமார் கல்வி அறிவற்றவர்களாகவும், அறியாமையான வர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தமிழைக் கூடக்கற்றுக் கொள்வதில்லை. அவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்களாகவும் ஒற்றைப் போக்கு உடையவர்களாகவும் வெளி உலகைத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். புத்தமதம் என்றால் அது சிங்களவர்களுக்கே உரியது என்று அவர்கள் கருதுகின்றார்கள். மஞ்சள் அங்கி அணிந்த ஒரு புத்தமத குருமக்கள் மிகுதியும் விரும்பிய ஒரு பிரதமரைச் சுட்டுக்கொன்றதும் இன்

நாம் அனுமதித்தோம். தமிழர்களை நாட்டில் எங்கும் வாழ அனுமதித்தோம், எங்களுடன் திருமணம் செய்யவும் அனுமதித்தோம் 1977 இல் ஒரு இலட்சத்துக்கு மேலான தமிழர்கள் கொழும்பில் வாழ்ந்தார்கள். ஒரு சில ஆயிரம் சிங்களப் படையினர் தான் வடக்கில் இருக்கிறார்கள் இப்படி கூறுகிறார் பன்னசீக. ஆயிரம் பேரைக் கொண்ட சிங்களப் படை ஒன்றை வடக்கிற்கு அனுப்ப வேண்டும் என்று முதலில் பிரேரித்தவர்களில் பன்னசீகவும் ஒருவர். இது தான் புத்தமத பக்தியும் கருணையும்.

கள் சங்கவின் ஆதிக்கம் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடாமல் இருந்தால் எதிர்காலம் இருண்டதாக இருக்கும். சிங்கள பௌத்தர் என்றகருத்தே புத்த மதத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு விரோதமானது புத்தர் ஒரு இலங்கையர் அல்ல ஒரு இந்தியர் என்பதை எத்தனை சிங்கள பௌத்தர்கள் அறிந்திருப்பார்கள் அல்லது ஏற்றுக் கொள்வார்கள் என்பது சந்தேகமே மதத்தை அரசியலில் இருந்து பிரிக்க விட்டால் இலங்கைக்கு எதிர்காலம் கிடையாது.

# மனித உரிமைகளை சீன அரசு மீறுகிறது

## --அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

சீனா மனித உரிமைகளை மீறி வருவதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது. நேற்று முன்தினம் சீனப்பிரதமர் லீபெங்கை அமெரிக்க அதிபர் சந்தித்துப் பேசுவதற்கு சில மணி நேரம் முன்பாக அமெரிக்காவின் இந்தக்குற்றச்சாட்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தியனென்மன் சதுக்கத்தில் இடம் பெற்ற படுகொலைக்கு பிரதமர் லீபெங் பொறுப்பு ஏற்க வேண்டுமென இருபது அமெரிக்க செனட்டர்கள் தெரிவித்தமையும், பாகிஸ்தானுக்கு ஏவுகணைத் தொழில் நுட்ப வசதிகளை விற்பனை செய்யப்போவதில்லை என சீனத்தலைவர்கள் கூறினாலும், உளவுத்துறைத் தகவல்களின் படி சீனா, பாகிஸ்தானுக்கு ஏவுகணைத் தொழில் நுட்பத்தை விற்பனை செய்வதும் சீனா மீதானஅமெரிக்காவின்குற்றச்சாட்டிற்கு காரணமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிய நிர்வாகம் தெரிவு

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந் நிர்வாக சபையின் தலைவராக எஸ் பன்னீர்செல்வம், செயலாளராக எஸ்.ஆர். லோகநாதன் பொருளாளராக எஸ். சண்முகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஆறு பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும், விளையாட்டு, சுகாதாரம், சமயம், கலைபண்பாடு, கல்வி, மகளிர் விவகாரங்களுக்கென தனித்தனி பொறுப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# காஷ்மீரைப் பாகிஸ்தான் பிடித்துவிட முடியாது

## - நரசிம்மராவ்

(நியூயோர்க்)

பாகிஸ்தான் படை பலத்தின் மூலம் இந்தியாவிலிருந்து காஷ்மீரைப் பிரித்து விட முடியாது என்று இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் தெரிவித்தார். நியூயோர்க்கில் ஐ.நா பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் உலகத்தலைவர்களுடன் நடத்திய இருதரப்பு சலந்துரையாடல்களின் போது இது தெரிவிக்கப்பட்டதாக இந்திய அதிகாரிஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், காஷ்மீர் பிரச்சினைக்கு ஏதும் தீர்வு காணப்படவேண்டுமானால் அது சிம்லா உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் எனவும் பிரதமர் பி.வி நரசிம்மராவ் வலியுறுத்தினாரென அவ்வதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், காஷ்மீர் விவகாரத்தில் முன்னைய சோவியத்யூனியன் கடைப்பிடித்த நிலைப்பாட்டையே ரஷ்யா கடைப்பிடிக்கும் என ரஷ்ய அதிபர் யெல்சின் இந்தியப் பிரதமருக்கு உறுதி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## ஜனநா. கட்சி வேட்பாளர்மீது பாலியல் குற்றச்சாட்டு

அமெரிக்க ஜனாதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களில் முன்னணியில் உள்ள ஆர்கின்ஸாஸ் கவர்னர்பில் கிளின்டன் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்காரணமாக இக்கட்சி தேர்தலில் கொண்டிருந்த அபார நம்பிக்கை சிதைவடைந்து வருகிறது.

திரு கிளின்டன் மேற்படி குற்றச் சாட்டை உறுதியாக மறுத்துரைத்து வருகின்ற போதிலும் மேற்படி குற்றச் சாட்டை வைத்துக் கொண்டு ஏனையகட்சிகள் பெரியளவில் தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றன.

இவர் மீதான குற்றச்சாட்டுக்காரணமாக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசார இயக்கம் பெருமளவு வீழ்ச்சி அடையும் என இக்கட்சி அஞ்சுகிறது.

கிளின்டன் மீதான குற்றச் சாட்டுக்காரணமாக எழுந்துள்ள இந்த நிலைமை செல்வாக்கைப்படிப்படியாக இழந்து வரும் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷுக்கு ஓரளவு சாதகமான வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கக் கூடும் என்று மேற்குலக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதேபோல நிலைமை கடந்த 1988 ஆம் ஆண்டு வேட்பாளர் பட்டியலில் முன்னணியில் இருந்த கெரிஹெராட் மீதான இவ்வாறான குற்றச் சாட்டுக் காரணமாகஅவரது வெள்ளை மாளிகைக்கனவு முடிவுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# குரோசி.ஸ்லவேனியாவிற்கு ரஷ்யா அங்கீகாரம் தரும்

குரோசியா ஸ்லவேனியா ஆகிய யூகோஸ்லவாக்கியாவில் போரிட்டு வரும் குடியரசுகளை தனிநாடுகளாக அங்கீகரிக்கப் போவதாக ரஷ்ய அதிபர் பொரிஸ்யெல்சின் தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளின் உச்சி மாநாட்டின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே திரு. யெல்சின் இதனை வெளியிட்டார்

# விநாயகராலய இலட்சார்ச்சனை

(முள்ளியவளை)

தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயகராலய இலட்சார்ச்சனை எதிர்வரும் ஐந்தாம் திகதி புதன்கிழமையன்று ஆரம்பமாகி ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது விடுதலைப் புலிகளின் வெற்றிக்காகவும், மக்களின் சுபீட்ச வாழ்வுக்குமாக விநாயகப் பெருமானின் அருளாசியை வேண்டி கடந்த வருடம் முதன் முதலாக இந்த இலட்சார்ச்சனை ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது மேலும் இவ்வாலயத்தில் விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமைக்கும் திருப்பணியும் தற்போது நடைபெற்று வருகின்றது.

ஈழநாதம்

# காஷ்மீருக்குள் 50,000 பேர் பாக்.கில் இருந்து நுழைவர்

## அமானுல்லாகான் அறிவிப்பு

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தானின் ஆட்சியின் கீழுள்ள ஆஸாத் காஷ்மீரில் இருந்து இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்மு காஷ்மீரினுள் 50 ஆயிரம் பேர் நுழைய உள்ளனர்.

எல்லைக் கோட்டை கடப்பதன் மூலம் இந்திய ஆதிக்கத்தின் கீழ் உள்ள காஷ்மீர் மக்களுடனான ஒருமைப்பாட்டை வெளியிட இருப்பதாக தீவிரவாதக்குழு ஒன்று தெரிவித்துள்ளது.

தீவிரவாத ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமானுல்லாகான் ஐ நா. பொதுச் செயலர் பொட்டோஸ் காலிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம் பெற இருக்கும் இந்த ஊர்வலத்தின் மீது இந்திய இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் மூலம் இரத்தக்களரி ஏற்படுமாயின் அதற்கு ஐ. நாவும் இந்தியாவுமே பொறுப்பேற்க வேண்டும் என எச்சரித்துள்ளார்.

ஊர்வலத்தில் பங்குபற்ற என இதுவரை 30 ஆயிரம் பேர் தங்கள் பெயர்களை பதிந்துள்ளனர் என முன்னணி அறிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி பாரதீய ஜனதா கட்சி தலைவர் முரளிமனோகர் ஜோசி ஜம்மு காஷ்மீர் பகுதிக்கு ஒருமைப்பாட்டு ஊர்வலம் ஒன்றை நடத்தியதும் அங்கு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தமையும் தெரிந்ததே.

## சாரதியைக் கொன்று ஆட்டோவைக் கடத்தியவர் பொலிஸாரால் கைது

(கண்டி)

சாரதியைக் கொலைசெய்து விட்டு ஆட்டோ ஒன்றைக் கடத்திச்சென்ற ஒருவர் கண்டி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மகியங்கனைப் பகுதியில் ஆட்டோ ஒன்றை லொறியில் ஏற்ற ஒருவர் முனைந்தபோது இதுபற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. கைதான நபரை விசாரணைசெய்தபோது ஆட்டோ சாரதி கொலை செய்யப்பட்டு ஆட்டோ கடத்தப்பட்ட விபரம் தெரியவந்தது. கொலை செய்யப்பட்ட சாரதியின் சடலம் கடும்காயங்களுடன் காட்டுப் பகுதியில் இருந்து கண்டு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகிந்தராஜபக்ஷாவின் பாதயாத்திரைக்கு சுதந்திரக்கட்சியில் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து அம்பலப்படுத்தும்முகமாக சுதந்திரக்கட்சியின் எம். பியான மகிந்த ராஜபக்ஷா மேற்கொள்ளவிருக்கும் பாதயாத்திரைக்கு அக்கட்சி வட்...

-பதில் எதிர்க்கட்சித் தலைவரும் சுதந்திரக்கட்சியின் முக்கிய தலைவருமான அநுரா பண்டாரநாயக்கா இப்பாதயாத்திரை பற்றிய கருத்து எதுவும் வெளியிடாமல் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதற்காக இந்தியா சென்றுள்ளமையை அடுத்து சுதந்திரக் கட்சியின்...

## மாரிமுத்துவிற்கு பிணையில் செல்ல அனுமதி

சென்ற மாதம் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தி. மு. க உறுப்பினரான மாரி...

## சுருட்டுத் தொழிலாளர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெற இருக்கும் மாபெரும் வெகுஜனப் போராட்டத்தில் கலந்து கொள்வதென வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

போராட்ட தினத்தன்று சகல சுருட்டு உற்பத்தி நிலையங்களையும் மூடி உற்பத்தி உரிமையாளர்களையும் தொழிலாளர்களையும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# தென்னாசியாவில் அணு ஆயுதம் புஷ் - நரசிம்மராவ் பேச்சு

(டில்லி)

தென்னாசியாவை அணு ஆயுதமற்ற பிராந்தியமாக்க வேண்டும் என்பது தொடர்பாக இந்தியாவின் ஒத்துழைப்பை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நாடியுள்ளார். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுதமற்றபிராந்தியமாக்குவது தொடர்பாக ஐந்து நாடுகளின் உச்சிமாநாட்டைநடாத்த இந்தியா ஒத்துழைக்க வேண்டுமென அமெரிக்க அதிபர் கோரிக்கை விடுத்தார். ஆனால் அணுவாயுதப்பரவலைத் தடுப்பதுபற்றி சர்வதேச ரீதியில் ஆராயப்பட வேண்டும் என்றும் பிராந்திய ரீதியில் இப்பிரச்சினை அணுகப்படுவது சிக்கல் நிறைந்தது என்றும் பி. வி. நரசிம்மராவ் இந்தியநிலைப்பாட்டை அமெரிக்க அதிபருக்கு விளக்கியதாகப் புதுடில்லிப் பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளன.

இதேவேளை சூப்பர் 301 மற்றும் டங்கல் யோசனைகள் என்பன பற்றியும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவும் கலந்துரையாடினர். இப்பேச்சின் அடிப்படையில் ஜெனிவாவில் மீண்டும் சந்திக்கும்போது இவை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திடலாமென இரு தலைவர்களும் நம்பிக்கை வெளியிட்டனர்.

## விமான நிலையத்தில் தமிழர்கள் மீது கெடுபிடி

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் தமிழர்களென்றால் கடும் கெடுபிடி விசாரணைகள் இடம் பெறுவதாக தெரியவருகிறது. தமிழர்கள் என்றால் விசா, கடவுச்சீட்டு என்பன குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் மட்டுமல்லாது 'எயர்லங்கா' அதிகாரிகளாலும் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகிறது. எப்படியாவது தமிழ்ப் பிரயாணிகளை பிரயாணம் செய்யாது தடுத்துவிட அங்குள்ள அதிகாரிகள் போட்டிபோட்டு செயல்படுகின்றனர்.

இதனால் நாளாந்தம் பலர் பிரயாணம் செய்யமுடியாது திரும்பிச் செல்லவேண்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜெர்மன் செல்ல தேவையான கடவுச்சீட்டு, விசா என்பவற்றுடன் சென்ற தமிழ் உயர் அதிகாரி ஒருவர் எயர்லங்கா அதிகாரிகளால் பயணம் செய்யவிடாது திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனைவள பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் பனைவளம் சம்பந்தமான பயிற்சி நடைபெற உள்ளது. இந்த பயிற்சி நெறிகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவிகள் 5 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

## ஜோர்ஜ் கபாஸ் பாரிஸிலிருந்து வெளியேற்றம்

(பாரிஸ்)

பாலஸ்தீன விடுதலை அமைப்பான பாலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணி அமைப்பின் தலைவரான ஜோர்ஜ் ஏ. கபாஸ் பாரிஸில் இருந்து நேற்றிரவு விமானம் மூலம் ரியூனிஸிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணையொன்றுக்கு உட்படும் நிலையில் இவர் இல்லை என வைத்தியர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து இவர் பிரான்ஸிலிருந்து வெளியேற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ. நாவின் உதவியுடன் நிரந்தர அமைதி ஏற்படுத்துக

## அரசிற்குகல்விமான்கள் ஆலோசனை

[கொழும்பு]

சிறிலங்கா அரசாங்கம் நிரந்தர அமைதிக்கு ஐ. நா நிறுவனத்தின் உதவியுடன் ஒரு வழிகாணவேண்டும் எனவும் ஐ. நா நிறுவனம் உடன்படிக்கை அமுலுக்கு நல்லவழியில் உதவிசெய்யக் கூடும் என சிறிலங்கா கல்விமான்களின் குழுவொன்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் மூலம் இருதரப்பாலும் வன்முறை போராட்டத்தில் இறங்காமல் தடுக்க முடியும் என தெரிவித்துள்ளது.

இவ்வாறானமத்தியஸ்தத்திற்கு ஏற்பாடு செய்ய பல நாடுகள் பல வழிகளில் முயன்றும் முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. மேலும் சிறிலங்கா அமைச்சர் தொண்டமானின் முயற்சிகளும் சிங்கள தீவிரவாதிகளின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளவிருந்த பயணம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

## இன்று

வழங்கினால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த எதிர்பார்ப்பு மறுக்கப்பட்...

## விடைத்தாள்கள் கொழும்பிற்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்த வேலைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. கப்பல் மூலம் இவ் விடைத்தாள்களை அனுப்பி வைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் கல்வித்திணைக்களம் தொடர்பு கொண்டிருக்கிறது.

# மலையகத்திற்குள் புலிகள்; சிங்களவர்கள் அச்சமாம்

சிங்களமக்கள் மத்தியில் தற்...

வத்தினர் பலியானதுடன் அதற்கு மேற்பட்ட எண்ணிக்...

யாத்துரைக்கு அக்கட்சி விட்டாரங்களில் எதிர்ப்பு கிளம்பியிருப்பதாக தெரிய வருகிறது.

ஒரு பகுதியினர் பாதயாத்திரையைப் புறக்கணிப்புச் செய்வதாகக் கூறப்படுகின்றது.

# அமைதியை விரும்பாதோரே தொண்டாவை எதிர்த்தனர் - செல்லச்சாமி

''நாட்டில் அமைதி ஏற்படுவதை விரும்பாதவர்களே அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகளை எதிர்ப்பவர்கள் ஆவர்'' என அமைச்சர் செல்லச்சாமி கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் வாய் ஓயாமல் அமைதி ஏற்படவேண்டும் என்று கூறுகிறார்களே தவிர எவருமே உருப்படியான யோசனைகள் எதையும் முன்வைக்கவில்லை. நாம் சில யோசனைகளை முன்வைத்திருக்கும் போது அதனை எதிர்த்து விமர்சனங்கள் செய்கிறார்கள் என்றார்.

நேற்று முன்தினம் கொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் கைத்தொழில் ராஜாங்க அமைச்சரும், இ.தொ.கா செயலாளருமான எம்.எஸ் செல்லச்சாமி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

# நிப்பன்மாறு கப்பலுக்கு செய்தியாளர் செல்லத்தடை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் நிப்பன்மாறு கப்பலில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உரை நிகழ்த்திய வைபவத்தில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்கப் பத்திரிகையாளருக்குத் தடை விதிக்கப்பட்டது.

ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்புப் பத்திரிகையாளர்களுக்கும் கூட ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரியினால் தடை விதிக்கப்பட்டது. ஜப்பானிய தூதுவர் இஸபு நிட்டா இந்தத் தடை பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிவித்தார். இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் பத்திரிகையாளருக்கு அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாயன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த நட்புறவு இளைஞர் கப்பலான நிப்பன்மாறுவில் 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். சிறிலங்கா இளைஞர்கள் 20 பேர் இக்கப்பலில் பயணத்திலீடுபட்டுள்ளனர்.

**1ஆம் மாத நினைவஞ்சலி**

**திருமதி பார்வதிதேவி கார்த்திகேசு**

(சிவகங்கை ரீச்சர்)

| மண்ணில் : | விண்ணில் : |
|---|---|
| 02 - 06 1917 | 03 - 01 - 1992 |

எமது ஸ்தாபகரின் மனைவியும் முன்னாள் போசகருமான அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம.

கலைச்சுடர் ச. ச. நிலையம்

(2175) கொய்யாத்தோட்டம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முத்து அவரது மகன் குமார் ஆகிய்யாரை பிணையில் விடுதலை செய்யுமாறு விசேட நீதிமன்ற நீதிபதி சித்தீக் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழீழ

இணக்கம் தெரிவித்தன. வெளிநாட்டு அரசுகளின் இந்தத் தலையீட்டை இந்தியா விரும்பவில்லை. தமிழரின் தேசியப் பிரச்சினை தனது பிரதேச அதிக்க எல்லைகளுக்கு அப்பால் சென்று சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறுவதையும் தமிழரின் தன்னாட்சி உரிமைக்குச் சர்வதேச சமூகத்தின் அனுதாபம் திரண்டுவருவதையும் இந்தியஅரசு விரும்பவில்லை. இதற்கு முட்டுக்கட்டை போடும் நோக்கத்திலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சர்வதேசப் பயங்கரவாத இயக்கமாகக் கற்பிக்க முயல்கிறது'' இவ்வாறு புலிகளின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

''சிறிலங்கா அரசு சமாதானக் கதவுகளை மூடிவிட்டு பெரிய யுத்தத்திற்கான தயாரிப்புக்களைச் செய்துவருகிறது சிங்கள அரசின் இந்த இராணுவ அணுகுமுறை குறித்து உலக நாடுகள் பல அதிருப்தி தெரிவித்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதிகளாகத் திரிபுபடுத்திக்காட்டி, சிறிலங்காவின் இராணுவ நடவடிக்கையை ஊக்குவித்து நியாயப்படுத்தும் நோக்கிலும் புலிகளின் தலைவர்கள் மீது இந்தியா பழி சுமத்தியிருக்கிறது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பாரிஸ் நகரில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறும் இச்சூழலில் இந்திய அரசு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருப்பதும் நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். சிங்கள அரசின் இராணுவப்பாதையை நியாயப்படுததி பிரேமதாசா ஆட்சிபீடம் கடனுதவி பெற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக்கொடுப்பதும் இந்தியாவின் நோக்கமாக இருக்கிறது'' என்றும் அவர் கூறினார்.

## வவுனியாவிற்குள்

தியட்சகர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அவ்வுத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது வவுனியாப் பகுதியில் நிரந்தரமாக வதிவோரும், தற்காலிகமாக வசிப்போரும் பொலிசாரிடம் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

எதிர்பார்ப்பு மறுக்கப்பட்டால் மற்றும் பொருளாதார உணவு, மருத்துவ கட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுமானால் நாடு இரு கூறாவதை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு வண. றோயல் டயஸ் பி பி ஸி.க்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## உலக

279 இளைஞர்களைத் தாங்கி இந்தக் கப்பல் கொழும்பு வந்துள்ளது.

சிறிலங்கா குழுவின் தலைவரான விக்கிரமதுங்க மேலும் கூறியதாவது:

நாம் இங்கு வருவதற்கு முன்னர் டோக்கியோவின் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலின் போது சிறிலங்காவில் ஒரு உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதாகவும், அதனால் இங்கு வருவதற்கு அஞ்சுவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஐரோப்பிய நாட்டவரே இவ்வாறு கூறியதாகவும், சிங்கப்பூருடன் திரும்பி விடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ் தூதுக்குழுவின் தலைவரான இளைஞர் மோஹஸ்ஸிம் ஹோஸ்சோ குறிப்பிடுகையில் சிறிலங்காவில் சிங்களவருக்கும் தமிழருக்கும் தகராறு நடைபெறுவதாக நாம் அறிகிறோம். இதன் காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒரு யுத்தமே நடைபெறுகிறது. இந்தச்சண்டை நல்லதல்ல. இது நிறுத்தப்படவேண்டும் என்றார்.

## காணாமற்

இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு அவர்கள் வதிவிடத்திலிருந்து சுமார் 400 யார் தூரத்தில் சடலங்கள் எரிக்கப்பட்டதாக தமதுமுதல் நாள் மட்டக்களப்பு விஜயத்தின் போது அறிந்து கொண்டதாக விசாரணைக்குழு சுட்டிக் காட்டியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடகாலத்தில் 3,400 க்கும் அதிக மானவர்கள் காணாமற்போயுள்ளதாக மட்டக்களப்பு பிரசைகள் குழு தம்மிடம் தெரிவித்ததாக கனேடியத் தூதுக்குழு தெரிவித்தது.

## வவுனியா

பொழுது சிங்கள முஸ்லிம் குடியேற்றங்கள் துரிதமாக இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிடத்தக்கது.

## தொலைக்காட்சி

பித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல சிறிலங்கா அரசு தயங்குகிறது. ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் துணிவு எவருக்காவது இருக்கவேண்டும். தீர்வுத் திட்டம் முடிவான முடிவு என்று கருதக்கூடாது. அது பேச்சுவார்த்தைக்கான முதற்படியாக அமையலாம் என்றார் அவர்.

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றிய செய்திகள் மேற்கு நாட்டுத் தொடர்புச் சாதனங்களில் முக்கியத்துவம் பெறுவதில்லை என்பதையும் அவர் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

தொடர்புச் சாதனங்கள் சமச்சீரற்ற முறையிலும், போதிய அளவு முக்கியத்துவம் வழங்காமல் செய்திகளை வெளியிட்டமை தொடர்பாகத் தாம் குழப்பமடைந்திருப்பதாகவும், கனடா திரும்பியதும் தாம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கனேடியக்குழு அங்கத்தினர் தெரிவித்தனர்.

போது பீதியும் பதற்றமும் ஏற்பட்டுள்ளன. அமைச்சர் எஸ். தொண்டமானின் இனப் பிரச்சினைக்கான சமரசத் திட்டம் பிசுபிசுத்ததையும் குறிப்பிட்ட காலப்பகுதியில் புலிகள் கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல்களும் சிங்கள மக்களின் அச்சத்துக்கான காரணமாக அமைகிறது என்று பி. பி. ஸி. சிங்களச் சேவை கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனவரி 22ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணு அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான படையினர் காயப்பட்டுள்ளனர்.

பதுளையில் ரூபா 15 லட்சத்துக்கு மேற்பட்ட தொகை கொள்ளை போனதைத் தொடர்ந்து 150 க்கும் மேற்பட்ட மலையகத் தொழிலாளர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து புலிகள் தோட்டப்பகுதிகளில் ஊடுருவி விட்டார்கள் என்று சிங்களவர் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

இவ்வாறு பி.பி ஸி சிங்கள சேவை தெரிவிக்கின்றது.

# தமிழகச் சிறையில் புலிகள் மீது சித்திரவதை

## முரசொலிமாறன்

ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாக தமிழகப் பொலிசார் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒருவரைக் கொடுமைப்படுத்தி வாக்குமூலம் பெறப்பட்டதாக திராவிட முன்னேற்றக்கழக நாடாளு மன்ற உறுப்பினர் முரசொலி மாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை திராவிடமுன்னேற்றக் கழக கருணாநிதி விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஒருவர்மீது மூன்றாந்தர முறைகளைப் பயன்படுத்தி வாக்கு மூலம் பெறப்பட்டதாக கூறியுள்ளார்.

**பதிப்பகஊழியர்கள் தேவை**

✱ அச்சுக் கோர்ப்பாளர்கள்

✱ பக்கம் கட்டுநர்

✱ புத்தகம் கட்டுநர்

மேற்படி வேலைகளில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்

05-02-92 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

முகவரி:

**மாறன்** பதிப்பகம்

இல. 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(ஈ/3877)